## கடலூர் கிழக்கு மாவட்டம்

# பரங்கிப்பேட்டை வடக்கு, பரங்கிப்பேட்டை தெற்கு, பரங்கிப்பேட்டை மேற்கு - கீரப்பாளையம் கிழக்கு, கீரப்பாளையம் மேற்கு, கீரப்பாளையம் மத்திய - புவனகிரி கிழக்கு, புவனகிரி மேற்கு, புவனகிரி மத்திய - கடலூர் வடக்கு, கடலூர் மத்திய - காட்டுமன்னார்கோயில் கிழக்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றிய கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கடலூர் கிழக்கு மாவட்டத்தில் சிதம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புவனகிரி கிழக்கு, பரங்கிப்பேட்டை வடக்கு, தெற்கு ஆகிய ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளை இணைத்து மூன்றாகவும், புவனகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீரப்பாளையம் கிழக்கு,மேற்கு ஆகிய ஒன்றியங்கள் மூன்றாகவும், புவனகிரி கிழக்கு,மேற்கு ஆகிய ஒன்றியங்கள் மூன்றாகவும், கடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடலூர் வடக்கு ஒன்றியத்தை இரண்டாகவும் பிரிக்கப்பட்டு புதிய கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறனர்.

காட்டுமன்னார்கோயில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீரப்பாளையம் மேற்கு ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளை காட்டுமன்னார்கோயில் கிழக்கு ஒன்றியத்துடன் இணைத்து மறுசீரமைக்கப்படுகிறது.

அவ்வாறு பிரிக்கபட்ட ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**பரங்கிப்பேட்டை வடக்கு ஒன்றியம் :** 1. சேந்திரக்கிள்ளை, 2. வேலங்கிப்பட்டு, 3. மணிக்கொல்லை, 4. சின்னூர்புதுப்பேட்டை, 5. வில்லியநல்லூர், 6. சிலம்பிமங்கலம், 7. பெரியப்பட்டு, 8. சொத்தட்டை, 9. பெரியகுமட்டி, 10. சின்னகுமட்டி, 11. பி.முட்லூர், 12.அருண்டொழிதேவன், 13. மஞ்சக்குழி, 14. அரிய கோஷ்டி, 15. வயலாம்பூர், 16.பூவாலை ஆகிய 16 ஊராட்சிகள் மற்றும் கிள்ளை பேரூர்.

**பரங்கிப்பேட்டை தெற்கு ஒன்றியம் :** 1. கீழ்அனுவம்பட்டு, 2. பு.மடுவங்கரை, 3. நஞ்சைமகத்துவாழ்கை, 4. தில்லைவிடங்கன், 5. பின்னத்தூர், 6. நக்கரவந்தன்குடி, 7. உத்தம சோழமங்கலம், 8.வசபுத்தூர், 9. கனகரப்பட்டு, 10. பிச்சாவரம், 11. டி.எஸ்.பேட்டை, 12.கீழ்திருகழிப்பாலை, 13. மேல்திருகழிப்பாலை, 14. கீழ்பெரம்பை, 15.கவரப்பட்டு, 16. பள்ளிபடை ஆகிய 16 ஊராட்சிகள் மற்றும் பரங்கிப்பேட்டை பேரூர்.

**பரங்கிப்பேட்டை மேற்கு ஒன்றியம் :** 1. மேல்அனுவம்பட்டு, 2. சி.முட்லூர், 3. தீத்தாம்பாளையம், 4. தில்லைநாயகபுரம், 5.தச்சக்காடு, 6. கீழமணக்குடி, 7. குறியாமங்கலம், 8. ஆயிபுரம், 9. ஆதிவராகநல்லூர், 10. கோவிலாம்பூண்டி, 11. மீதிக்குடி, 12. சி.கொத்தங்குடி, 13. குமாரமங்கலம், 14.கீழமூங்கிலடி, 15. மேல்மூங்கிலடி, 16. லால்புரம் ஆகிய 16 ஊராட்சிகள்.

**கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம் :** 1. கீரப்பாளையம், 2. வடஹரிராஜபுரம், 3. சாக்காங்குடி, 4. ஆயிப்பேட்டை, 5. கிளியனூர், 6. ஒரத்தூர், 7. பாளையஞ்சேர்ந்தங்குடி, 8. மதுராந்தகநல்லூர், 9.இடையன்பால்சொரி, 10. கீழ்நத்தம், 11. தென்ஹரிராஜபுரம், 12. எண்ணநகரம், 13.சி.மேலவன்னியூர், 14. வயலூர் ஆகிய 14 ஊராட்சிகள்.

**கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம் :** 1. பரதூர், 2. சாத்தமங்கலம், 3. பூதங்குடி, 4. வெள்ளியகுடி, 5. வாக்கூர், 6. பூந்தோட்டம், 7. வெய்யலூர், 8. வடபாக்கம், 9. ஓடாக்கநல்லூர், 10. தேவங்குடி, 11.தரசூர், 12. வாழைக்கொல்லை, 13. கூளாப்பாடி, 14. தெற்கு விருத்தாங்கன் ஆகிய 14 ஊராட்சிகள்.

**கீரப்பாளையம் மத்திய ஒன்றியம் :** 1. கண்ணங்குடி, 2. கே.ஆடூர், 3. சி.வீரசோழகன், 4. துணிசிரமேடு, 5. செங்கல்மேடு, 6.பண்ணப்பட்டு, 7. சிறுகாலூர், 8. அய்யனூர் அக்ராமங்கலம், 9. விளாகம், 10.டி.மணலூர், 11. சேதியூர், 12. டி. நெடுஞ்சேரி, 13. பெருங்காலூர், 14. முகையூர் ஆகிய 14 ஊராட்சிகள்.

**புவனகிரி கிழக்கு ஒன்றியம் :** 1. அழிச்சிக்குடி, 2. வத்தராயன்தெத்து, 3. மஞ்சக்கொல்லை, 4. மிராளூர், 5.கிளாவடிநத்தம், 6. பு உடையூர், 7. வடதலைக்குளம், 8. அம்பாள்புரம், 9. உளுத்தூர், 10. பிரசன்னராமபுரம் ஆகிய 10 ஊராட்சிகள் மற்றும் புவனகிரி பேரூர்.

**புவனகிரி மேற்கு ஒன்றியம் :** 1. கத்தாழை, 2. மேல் வளையமாதேவி, 3. கீழ் வளையமாதேவி, 4. அம்மன்குப்பம், 5. எறும்பூர், 6. நெல்லிக்கொல்லை, 7. துறிஞ்சிக்கொல்லை, 8. பின்னலூர், 9.கரைமேடு, 10. அகர ஆலம்பாடி, 11. பி. ஆதனூர், 12. பெரிய நெற்குணம், 13.சின்னநெற்குணம், 14. வீரமுடையாநத்தம், 15. ஆனைவாரி ஆகிய 15 ஊராட்சிகள் மற்றும் சேத்தியாத்தோப்பு பேரூர்.

**புவனகிரி மத்திய ஒன்றியம் :** 1. பு. கொளக்குடி, 2. மருதூர், 3. ஜெயங்கொண்டான், 4. எல்லைக்குடி, 5.குமுடிமூலை, 6. நத்தமேடு, 7. கிருஷ்ணாபுரம், 8. வடக்கு திட்டை, 9. சாத்தப்பாடி, 10. சொக்கன்கொல்லை, 11. மணக்குடி, 12. பு.சித்தேரி, 13. தெற்கு திட்டை, 14.பூதவராயன்பேட்டை, 15. கஸ்பா ஆலம்பாடி ஆகிய 15 ஊராட்சிகள்.

**கடலூர் வடக்கு ஒன்றியம் :** 1. குண்டுஉப்பலவாடி, 2. உச்சிமேடு, 3. நாணமேடு, 4. பெரியகெங்கனாங்குப்பம், 5.அழகியநத்தம், 6. திருப்பனாம்பாக்கம், 7. கரைமேடு, 8. உள்ளேறிப்பட்டு, 9.மலையபெருமாள் அகரம், 10. காரணப்பட்டு, 11. பள்ளிப்பட்டு, 12. தூக்கனாம்பாக்கம் ஆகிய 12 ஊராட்சிகள்.

**கடலூர் மத்திய ஒன்றியம் :** 1. நல்லாத்தூர், 2. தென்னம்பாக்கம், 3. செல்லஞ்சேரி, 4. புதுக்கடை, 5. சிங்கிரிகுடி, 6. கிளிஞ்சிக்குப்பம், 7. மதலப்பட்டு, 8. கீழ்குமாரமங்கலம், 9. மேல்அழிஞ்சிப்பட்டு, 10. கீழ்அழிஞ்சிப்பட்டு ஆகிய 10 ஊராட்சிகள்.

**காட்டுமன்னார்கோயில் கிழக்கு ஒன்றியம் :** கீரப்பாளையம் மேற்கு ஒன்றியத்தில் காட்டுமன்னார்கோயில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 1. கலியமலை, 2. கந்தகுமாரன், 3. பூர்த்தங்குடி ஆகிய 3 ஊராட்சிகள் காட்டுமன்னார்கோயில் கிழக்கு ஒன்றியத்துடன் இணைக்கப்படுகிறது.

### ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு அமையப் பெற்ற பரங்கிப்பேட்டை வடக்கு, பரங்கிப்பேட்டை தெற்கு, பரங்கிப்பேட்டை மேற்கு - கீரப்பாளையம் கிழக்கு, கீரப்பாளையம் மேற்கு, கீரப்பாளையம் மத்திய - புவனகிரி கிழக்கு, புவனகிரி மேற்கு, புவனகிரி மத்திய - கடலூர் வடக்கு, கடலூர் மத்திய - காட்டுமன்னார்கோயில் கிழக்கு ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**பரங்கிப்பேட்டை வடக்கு ஒன்றியம்** பொறுப்பாளர் : **திரு.முத்துபெருமாள்** கடலூர் மாவட்டம்.

**பரங்கிப்பேட்டை தெற்கு ஒன்றியம்** பொறுப்பாளர் : **திரு.இரா.கலையரசன்** கடலூர் மாவட்டம்.

**பரங்கிப்பேட்டை மேற்கு ஒன்றியம்** பொறுப்பாளர் : **திரு.எம்.மனோகர்** கடலூர் மாவட்டம்.

**கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம்** பொறுப்பாளர் : **திரு.வி.ஜி.பி.சபாநாயகம்** கடலூர் மாவட்டம்.

**கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம்** பொறுப்பாளர் : **திரு.டி.திருமூர்த்தி** கடலூர் மாவட்டம்.

**கீரப்பாளையம் மத்திய ஒன்றியம்** பொறுப்பாளர் : **திரு. வி.பி. பாலு** கடலூர் மாவட்டம்.

**புவனகிரி கிழக்கு ஒன்றியம்** பொறுப்பாளர் : **திரு.ஏ.எஸ்.மதியழகன்** கடலூர் மாவட்டம்

**புவனகிரி மேற்கு ஒன்றியம்** பொறுப்பாளர் : **திரு.மதியழகன்** கடலூர் மாவட்டம்

**புவனகிரி மத்திய ஒன்றியம்** பொறுப்பாளர் : **திரு.வெற்றிவேலு** கடலூர் மாவட்டம்

**கடலூர் வடக்கு ஒன்றியம்** பொறுப்பாளர் : **திரு. கே.ஆர்.தனஞ்செயன்** கடலூர் மாவட்டம்

**கடலூர் மத்திய ஒன்றியம்** பொறுப்பாளர் : **திரு. கே. மகேஷ் (எ) இராஜாமணி** கடலூர் மாவட்டம்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## சிவகங்கை முன்னாள் நகர் மன்ற தலைவர்

# சொ.லெ. சாத்தையா மனைவி லீலாவதி மறைவு!

## அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் அஞ்சலி!

*சிவகங்கை, ஜூன் 1-* சிவகங்கை முன்னாள் நகர் மன்ற தலைவர் சொ.லெ.சாத்தையா. மனைவி திருமதி லீலாவதி அம்மாள்மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம் சொ.லெ.சாத்தையா, மூத்த கழக முன்னோடி ஆவார். இவரது மனைவி திருமதி லீலாவதி அம்மாள்.நேற்று முன்தினம் மாலை திடீரென்று மறைவெய்தினார். மரணமடைந்த லீலாவதி உடலுக்கு சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து மாவட்ட கழகதுணைசெயலாளர் த.சேங்கைமாறன், ஒன்றிய கழக செயலாளர்கள் எம். ஜெயராமன் ,திருமலைமுத்துராமலிங்கம்,அ. முத்துச்சாமி,சிவகங்கைநகர் கழகசெயலாளர்நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை. ஆனந்த், முன்னாள் எம்.எல்.ஏ எஸ் .மாரியப்பன் கென்னடி, மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.ஆயூப் கான்,நக ர் மன்ற உறுப்பினர் ஜெயகாந்தன், ராம்தாஸ்மாநில காங்கிரஸ் பொதுச்செயலாளர்பச்சேரி சி.ஆர்.சுந்தர்ராஜன்மற்றும் அனைத்து கட்சியினர் அஞ்சலிசெலுத்தினார்கள். லிலாவதிக்கு மகன், மகள்உள்ளனர். நேற்று முன்தினம் மாலை இறுதி சடங்குகள் நடைபெற்றது.



முதலமைச்சர் அவர்கள், விருதுநகர் மாவட்டம் , இராஜபாளையத்தில் நகராட்சியில் , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ .2.90 கோடி மதிப்பீட்டில் , புதுப்பிக்கப்பட்ட காந்திஜி நூற்றாண்டு பேருந்து நிலையத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார் . அதனை தொடர்ந்து , புதுப்பிக்கப்பட்ட காந்திஜி நூற்றாண்டு பேருந்து நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் , தலைமையில் , தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீ குமார் , இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தங்கப்பாண்டியன் , இராஜபாளையம் நகர்மன்ற தலைவர் பவித்ரா ஷியாம் மற்றும் சீர்மரபினர் வாரியத்துணைத் தலைவர் இராசா அருண்மொழி , நகர திமுக செயலாளர் ராமமூர்த்தி, பொதுக் குழு உறுப்பினர் கனகராஜ், சிறுபான்மை நல உறுப்பினர் உஸ்மான், ஆகியோர் முன்னிலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அரசு பேருந்து சேவைகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார் .

## இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ள –

# நகைக்கடன் நிபந்தனைகளை கைவிட வலியுறுத்தி மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## தஞ்சையில் – ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் நடைபெற்றது!

*தஞ்சாவூர், ஜூன். 1-* இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ள, நகைக்கடன் நிபந்தனைகளை உடன் கைவிட வலியுறுத்தி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தஞ்சை தலைமை தபால் நிலையம் எதிரில் ஆயிரக் கணக்கான விவசாயிகளை ஒருங்கிணைத்து நடத்தப்பட்டது.

விவசாயிகள், ஏழை மக்கள் நடுத்தர மக்கள் தங்களிடம் உள்ள நகைகளை கூட்டுறவு மற்றும் வங்கிகளில் அடமானம் வைத்து விவசாய, அவசரத் தேவைகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர். அடகு வைத்த நகையை திருப்ப முடியாத மக்கள் வட்டியை மட்டும் கட்டி மறு அடமானம் வைப்பது நடைமுறையில் உள்ளது. தற்போது இந்திய ரிசர்வ் வங்கி தங்க நகை கடன் பெறுவதற்கு புதிய நிபந்தனைகளை அறிவித்துள்ளது.

இந்த நிபந்தனைகள் விவசாயிகளையும், வியா பாரிகளையும், பொதுமக்களையும் பெரிதளவில் பாதிக்கும். இந்த மக்கள் விரோத போக்கை கண்டித்து, அனைத்து விவசாய சங்கங்களின் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உள்ளாட்சி அமைப்புகளின், முன்னாள், இந்நாள் நிர்வாகிகள் ஒருங்கி ணைத்து கார்ப்ரேட் கம்பெனிகளுக்கு ஆதரவாக விவசாயிகள் நடுத்தர, சாதாரண மக்கள் மற்றும் வியாபாரிகளுக்கு எதிராக ஒன்றிய அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ள நகைக்கடன் நிபந்தனைகளை உடன் கைவிட வலியுறுத்தி மாபெரும் கண்டனஆர்ப்பாட்டம்.

தி.மு.க மாநில விவசாய அணிச் செயலாளரும், தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி யுமான ஏ.கே.எஸ். விஜயன் தலைமையில் தஞ்சையில் நடைபெற்ற இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ, நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ, கே.கே. செல்லபாண்டியன், தி.பழநிவேல்,

கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம். ச.முரசொலி எம்.பி. வை.செல்வராஜ் எம்.பி, எம்.எல்.ஏக்கள் டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், பன்னீர் செல்வம், மாரிமுத்து, முன்னாள் எம்.பி, செ.இராமலிங்கம் மாநகரச் செயலாளர்கள் சு.ப.தமிழழகன், சண்.இராமநாதன், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் தோழமை கட்சியினர் டி.ஆர்.லோகநாதன். சாமி நடராஜன். பி.எஸ்.மாசிலாமணி, ஜெய்சங்கர்,

முன்னாள் எம்.எல்.ஏ கள் எம்.இராமசந்திரன், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, எஸ்.கே.வேதரத்தினம், வை.சிவபுண்ணியம், ஆடலரசன், பால அருட்செல்வன், விவசாய சங்க மாநில நிர்வாகிகள் என். கே. கே. பெரியசாமி, இரா. தமிழ்மணி, எஸ். அப்துல்காதர், கள்ளிபட்டி மணி, மா.முத்துராமலிங்கம், பா. செந்தமிழ்செல்வன், எல்.பி.தர்மலிங்கம், குறிஞ்சி என். சிவகுமார், முதுகுளத்தூர் கே.முருகவேல், ஆர். டி.ஏ. ஆதிசேஷன், ஆர்.கணேசன், கு.செல்லப்பா, டி.எம். அரியப்பன், டி. வெங்கடேசன், ஜித்து (எ) ராஜரத்தினம், வி.என்.மணி, என். நல்லசேதுபதி, கே. புருஷோத்தமன், த.சித்தார்த்தன், சுப்பிர மணியன் உள்ளிட்ட விவசாய அணி மாவட்ட நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், விவசாய சங்கங்கள், விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி நிர்வாகிகள், நகர ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் ஆயிரக்கணக்கான விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர்.

### தமிழினத் தலைவர் – முத்தமிழறிஞர் கலைஞரின் 102 வது பிறந்தநாளை

# கழக பொறியாளர் அணி சார்பில் "செம்மொழி நாளாக" சிறப்பாகக் கொண்டாடிடுவீர்!

## எஸ்.கே.பி.கருணா வேண்டுகோள்!

தி.மு.க. பொறியாளர் அணியின் மாநில நிர்வாகிகளின் காணொளி கூட்டம் 30-5-2025 அன்று மாநிலப் பொறியாளர் அணித் தலைவர் துரை கி.சரவணன் தலைமையில் நடைபெற்றது.

அதில் மாநிலத் துணைச் செயலாளர்கள் கு.சண்முகசுந்தரம், இரா.நரேந்திரன், வே.உமாகாந்த், சி.பிரதீப், இரா.ப.பரமேசுகுமார், ஆர்.வி.எல்.ரவிச்சந்திரன், கலை.கார்த்திகேயன், அம்பாள்.நந்தகுமார், வெற்றி.ஞானசேகரன், பி.அன்பழகன், எம்.பி.ராஜவர்மன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1) அருகில் உள்ள அரசு பள்ளிகளுக்கு குடிநீர் வசதி செய்துதருதல் மற்றும் அங்கன் வாடிகளுக்கு தேவையான சமையல் பாத்திரங்கள் வழங்குதல்

2) ஆதரவற்ற முதியோர்களுக்கு உதவிகள் செய்தல்.


3) திருக்குறளுக்கு உரை எழுதிய கலைஞரின் திருக்குறள் உரை புத்தகத்தினை அருகில் இருக்கும் பள்ளிக்கூட நூலகங்களுக்கு வழங்குதல் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு பயன் உள்ள வகையில் செம்மொழிநாளாக தலைவரின் பிறந்தநாள் கொண்டாட்டங்களை பொறியாளர் அணியினர் நடத்திட வேண்டும்.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்
கழக பொறியாளர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# மு. சண்முகம்

## ஜூன் 1 (1987)



தந்தை பெரியாரின் நம்பிக்கைக்குரிய தொண்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, பேரறிஞர் அண்ணாவின் கவனத்தைக் கவர்ந்து அவரது இதயத்திலும் தனக்கென ஒரு இடத்தை பிடித்துக் கொண்டவர்.

கழகம் துவங்கிய காலத்திலிருந்து தலைமைக் கழகத்தில் பொறுப்பாளராக பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

'நம்நாடு' திங்கள் இதழாக வெளிவந்தபோதும், 'கழகக் குரல்' வார இதழிலும், 'தோழன்' என்ற புனைப்பெயரில் இவர் எழுதிய கட்டுரைகள் ஏராளம்.

1976ல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, பிசா காலத்தில் சோதனை ஏற்பட்டபோதுதான் 'தோழன்' என்ற பெயர் அவருக்கு எவ்வளவு பொருத்தம் என்பது புரிந்தது என தலைவர் கலைஞர் கூறியுள்ளார். மேலும், தனது இரங்கல் உரையில் "கழகத்தின் வரலாற்றுக் குறிப்புப் புத்தகம் – எழுதப்படாத புத்தகம் சண்முகம்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**